1981 மே 13]

பெற்று தங்கள் தங்களுக்கு இந்தக் கோட்டா வேண்டுமென்ற போட்டி வருகின்றபோழுது, தேர்வு நடத்துகின்றவர்களும் மாநிலங்களையும் மனதிலே வைத்துக்கொண்டு இடங்களையும் மனதில் வைத்துக்கொண்டு இன்னின்ன மாநிலங்களுக்கு இத்தனைபேரைத்தான் தேர்ந்தெடுப்பது என்ற முறையையும் கொண்டிருப்பதனால்தான் நமக்குக் குறைகிறது என்ற நிலை வருகிறதே தவிர இல்லாவிட்டால் வேறு நிலை இல்லை. இருந்தாலும் இந்தத் தரத்தை உயர்த்துவதற்கும், தகுதி படைத்தவர்களை, திறமை படைத்தவர்களை அந்தத் தேர்வுக்கு அனுப்புகின்ற முயற்சியிலேயும் நாம் ஆழ்ந்து சிந்தனை செலுத்தி வருகிறோம்.

உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகள் கட்ட கடன் வசதி அளிக்கும் திட்டம்.

*வினா எண். 990— திரு. செ. செம்மலை: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலோர மீனவர்கள் போல முழு நேரமும் மீன் பிடிக்கும் தொழிலையே நம்பியிருக்கிற உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகள் கட்ட கடன் வசதி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கும் அந்தத் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடலோர மீனவர்கள் போல உள்நாட்டு மீனவர்களிலே சிலரும் முழுக்க முழுக்க அந்தத் தொழிலையே நம்பியிருக்கிறார்கள். எனவே, அப்படிச் சொந்தமாக நிலம், வீடு மற்றும் சொத்துக்கள் இல்லாத உள்நாட்டு மீனவர்களுக்கு இதுபோன்ற திட்டத்தை விரிவுபடுத்த அரசு இனிமேலாவது ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கடலோரப் பகுதியிலே வாழ்கின்ற மீனவர்கள் குடிசைகள் எல்லாம் மிகவும் பாதிக்கப்படுகிற சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அடிக்கடி புயலால் பாதிக்கப்பட வேண்டிய நிலைமையும் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட வேண்டிய நிலைமையும், கடல் அரிப்பால் பாதிக்கப்பட வேண்டிய நிலைமையும், கடலோர மீனவர்களுக்குத்தான் அதிகம் இருக்கிறது. அவர்களுக்கே நம் நிதி ஆதாரங்களுடைய அடிப்படையில் போதுமான அளவுக்கு வீடு கட்டித் தர முடியவில்லை ஓரளவுக்குத்தான். நாம் ஆண்டுக்காண்டு ஏற்றுக்கொண்டு

வருகிறோம். அந்த அளவில் பார்க்கும்போது முதல் உரிமை கடலோர மீனவர்களுக்குத்தான் தர வேண்டியிருக்கிறது. ஆகவே தான் உள்நாட்டு மீனவர்களைப் பற்றி நாம் கவனித்து, அவர்களுக்கு அந்த வகையில் நிதி ஒதுக்க இயலவில்லை. பின்னால் நிதி ஆதாரங்கள் வருகின்றபொழுது யோசிக்க வேண்டியதே தவிர, இப்பொழுது அதைப்பற்றிய செயற்குறிப்பில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறந்துவிட நேரிட்டால், அவர்களது குடும்ப நிவாரணத்திற்கு ரூ. 5,000 நிதி கொடுக்கப்படுவதாக கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகை உள்நாட்டு மீனவர்களுக்கும் பொருந்துமா என அறியவிரும்புகிறேன். அப்படியில்லையென்றால், அவர்களுக்கும் அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இறந்துவிடுகின்ற மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகையே தவிர, இறந்துவிடுபவர்களுக்குக் கொடுக்கப்படுவது அல்ல. அது மாதிரி குளத்திலோ, ஏரியிலோ நீந்தி மீன்பிடிக்கின்ற தொழிலில் ஈடுபடும்போது இறந்து விடுகின்ற நிலையென்றால், அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை தரலாமே தவிர, சாதாரணமாக இறந்து விடுகிறவர்களுக்குத் தரலாம் என்ற அளவில் ஈடுபட்டால் அரசாங்கத்தினுடைய நிதி இடம் தராது. ஆகவேதான் எதிர்பாராது இறந்துவிடுபவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். தியாகராசன்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சபை முன்னவர் அவர்கள் கடலோர மீனவர்களுக்கு மட்டும் வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்று இங்கே சொன்னார்கள். கிராமப் பகுதியிலே உள்ள மீனவர்கள் இன்று தொழில் நடத்த முடியவில்லை. காரணம், மழை இல்லாமல், மீனும் இல்லை, வருமானமும் இல்லை. கடலோரப் பகுதியிலேயிருக்கிற மீனவர்களுக்கு நல்ல வருமானம் இருக்கிறது. எனவே கிராமப் பகுதியில் கஷ்டப்பட்டுத் தொழில் நடத்த முடியாமல் இருக்கக்கூடிய அந்த மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா? அல்லது மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவர்களுடைய வறுமையைக் கணக்கில் வைத்து நாம் வீடு கட்டித் தருகிற நிலையில் இல்லை. அவர்களுக்கு ஏற்படுகிற ஆபத்துச் சூழ்நிலையை வைத்துத்தான் அதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. கடலோரப் பகுதியில் இருக்கிறவர்கள் புயலால், கடல் கொந்தளிப்பால், அரிப்பால் பாதிக்கப்படுகிற காரணத்தால்தான் முன்னுரிமை தரப்படுகிறது. போதுமான அளவுக்கு நிதி ஆதாரம் நமக்குக் கிடைக்கும்போது வேண்டுமென்றால், உள்நாட்டு மீனவர்களுக்கு ஒரு பங்கு, மற்றவை

கடலோர மீனவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற நிலைமை ஏற்படலாம். இப்பொழுது அந்த நிலைமைகள் இல்லாத காரணத்தால்தான் முன்னுரிமை கடலோரப் பகுதி மீனவர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்கூட்டர்களுக்கான வரிவிதிப்பு.

*வினா எண். 1081—திரு. கா. கோபால கிருஷ்ணன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஸ்கூட்டர்களுக்கு மற்ற அண்டை மாநிலங்களை விட வரி விதிப்பு அதிகமாயிருப்பதால் குறைக்க அரசிற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களிலே ஸ்கூட்டர், கார் முதலியவற்றிற்கு வரி குறைவாக இருப்பதால் ஸ்கூட்டர் விலை ரூ. 1,000 குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது, ஆதலால் ஸ்கூட்டர்களுக்கு மற்றும் கார்களுக்கு அண்டை மாநிலங்களில உள்ள தப்போல் வரியைக் குறைக்கும் நிலையில் மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் ஸ்கூட்டரைப் பற்றித்தான் இருக்கிறது. ஆனல், தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா பொருள்களின் வரி என்ன என்பதை என்னால் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியாது. மூலக் கேள்வியைப் பற்றி மட்டும்தான் சொல்ல முடியும். ஸ்கூட்டரைப் பற்றி சொல்ல வேண்டுமானால் ஸ்கூட்டருக்கு நம்முடைய மாநிலத்தில் 15% விற்பனை வரி போடுகிறோம். கர்நாடக மாநிலத்தில் 15% போடுகிறார்கள், அதுதான் அண்டை மாநிலம், பக்கத்து மாநிலம். கேரள மாநிலத்திலே 15% போடுகிறார்கள். ஆந்திராவில் 12% மகாரஷ்டிராவில் 12%, ஒரிசாவில் 13%, பாண்டிச்சேரியில் 7%. நாம் வரி போடுகிறபொழுது, மற்ற மாநிலங்களிலே வரி குறைவாக இருந்தால், எவ்வளவு வரி நஷ்டமாகும் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் வரி போடப்படுகிறது. இப்பொழுது பாண்டிச்சேரியிலே 7% இருந்தாலும், அது நம்முடைய மாநிலத்தைப் பாதிக்கவில்லையென்று, கணக்குப் பார்க்கும்போது நமக்குத் தெரிகிறது. கர்நாடகம் ஆந்திரம், கேரளத்தைப் பார்க்கும்போது, அதிகமான வரியென்று கூறுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்றால், ஸ்கூட்டரைப் பொறுத்தவரைக்கும் அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லையென்றுதான் நாம் 15% போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-50]

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு வரவேண்டிய வரி, அடுத்த மாநிலங்களில் ஸ்கூட்டர் வாங்குவதனால் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட வாகனங்களை மீண்டும் நமது மாநிலத்திலே பதிவு செய்யும்போது அந்த வரி இழப்பை வசூலிக்க முயற்சி செய்யப்படுமா?